Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/22**

Paper 2 Reading and Writing **October/November 2022**

INSERT **1 hour 45 minutes**

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **4** pages. Any blank pages are indicated.


© UCLES 2022

## பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

### குடும்பங்களுக்குள் கருத்து வேறுபாடுகள்

குடும்ப உறவுகள் போல வேறெந்த உறவும் நேசத்தையும் அன்பையும் காட்ட மாட்டாது. எனினும் பல சமயங்களில் குடும்ப உறவுகளுக்கிடையே மனக்கசப்புகளும் வெறுப்புகளும் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. இதன் மூலமாக எமக்கு மிக நெருக்கமாக இருந்த குடும்ப உறுப்பினர்கள் அந்நியர்களாகவும் விரோதிகளாகவும் எமக்குத் தெரியத் தொடங்குவார்கள்.

ஒரு சில மணி நேரங்களை குடும்பத்துடன் செலவிடுவதே சிலருக்கு மனக்கசப்பான அனுபவங்களைத் தரும். தனது குடும்பம் தனது இரண்டு சகோதரர்களின் குடும்பங்களை வருடமொருமுறைக்குத் தாயார் வீட்டில் சந்திப்பது பற்றி அகிலா கூறும்போது, "ஒவ்வொரு வருடமும் நாம் சந்திப்பதற்கு முன்னரும் இந்த வருடத்திற்கான எமது சந்திப்பு முந்தய வருடங்களிலிருந்து வித்தியாசமானதாக இருக்கும் என்று நினைப்போம். நாம் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகிறவர்களாகவும் இனிமையானதாகவும் நாட்கள் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு நம் எல்லோர் மத்தியிலும் இருக்கும். ஆனால், கடந்த வருடங்களைப் போலவே மனக்கசப்புகள் கொண்டதாக அந்தச் சந்திப்பும் அமைந்துவிடுவது கவலைக்குரியது. ஒருவரோடு மற்றவர் செலவிடும் நேரமானது நெருப்புக்கு மேல் நடப்பது போன்றதாக இருக்கும். எந்த நேரத்திலும் யாராவது கோபத்தில் வெடிகுண்டு போல் வெடிப்பார்களா என்ற பயம் எனக்குள் எப்போதும் இருக்கும். மீண்டும் வீட்டிற்குத் திரும்பும் நாட்களை எண்ணி ஏங்கும் தருணங்களாக சில நாட்கள் நகர்ந்து விடும்" என்று கூறினாள்.

அகிலாவின் குடும்ப நண்பரான சோமசுந்தரமும் அகிலாவின் கருத்தை ஆதரித்துத் தனது கருத்தைக் கூறினார். அவர்கள் குடும்பத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் இருந்தன. அவர்கள் நெருங்கிய உறவினர்களைச் சந்திக்க வெளியூர் சென்றபோது, ஒவ்வொருவரும் தமக்கான முதிர்ச்சி, மனப்பக்குவம் எல்லாவற்றையும் மறந்து, ஒருவரை மற்றவர் தவறாகப் புரிந்துகொண்டு வெறுக்கத் தொடங்கினார்கள்.

'ஏன் இன்னமும் உனக்கு வேலை கிடைக்கவில்லை', 'ஏன் இன்னமும் கல்யாணம் செய்யாமல் இருக்கின்றாய்' போன்ற எரிச்சலூட்டும் முன்யோசனையற்ற கேள்விகளைக் கேட்டு வீண் அறிவுரைகளைச் சிலர் தருவார்கள். இவர்கள் மீது எப்படி நமது உள் உணர்வுகளைக் கொட்டித் தீர்ப்பது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் மீது கோபம் வருவதில் எந்தத் தப்பும் இல்லை. ஆனால், அவர்கள் மீது கோபம் கொள்வதால் ஏற்படும் தீமை என்ன என்பதையும் நெருங்கிய உறவினர்களுக்குள் மனக்கசப்புகள் தோன்றும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இத்தகைய கேள்விகளுக்கு நகைச்சுவையான பதிலைக் கூறிவிட்டு நகர்வதே சிறந்தது. அல்லது பின்னர் பதில் கூறுவதாகக் கூறி மழுப்பிவிடலாம். இது உங்களைச் சற்று நிதானப்படுத்த உதவும். கேள்விக்கான சிறந்த பதிலைத் தயார்ப்படுத்தவும், பெரியவர்களோடு முரண்பாடுகளற்ற வகையில் பேசுவதற்கும் உதவும்.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### இள வயது பிள்ளைகளுடன் பெற்றோர்களின் கருத்து முரண்பாடுகள்

பெற்றோர்களுக்கும் அவர்களது இளவயது பிள்ளைகளுக்கும் இடையிலான உரையாடல்கள் பெரும்பாலான நேரங்களில் இருவேறு மொழி பேசும் இருவருக்கிடையிலான உரையாடல் போன்று அமைகின்றன. 'நான் சொல்வது உங்களுக்கு விளங்கவில்லை' அல்லது 'நான் கூறுவதை நீங்கள் கேட்பதில்லை' என்ற பதப் பிரயோகங்கள் இளவயது பிள்ளைகளால் அடிக்கடி பெற்றோர்களுக்குச் சொல்லப்படுவனவாக உள்ளன. 'எனக்கு உன்னை சின்ன வயதிலிருந்தே தெரியும். நான் சொல்வதைக் கேள்' என்பது பல பெற்றோர்கள் அடிக்கடி கூறுவதாகும். பெற்றோர்கள் தமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமது பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்று எப்போதும் விரும்புவார்கள். பிள்ளைகள் வளர்வதற்கேற்ப அவர்களது உணர்வுகளும், விருப்பு வெறுப்புகளும் மாறுபடும் என்பதைப் பெற்றோர்கள் உணரத் தவறும்போது அவர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் வளர அதிகம் வாய்ப்பு ஏற்படுகின்றது.

குடும்பங்கள் பலவற்றிற்குக் கவுன்சிலராகப் பணிபுரியும் செல்வா பேட்டியொன்றில் கூறும்போது, "பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவானது இருவர் 'சல்சா' நடனம் ஆடுவதற்கு இணையானது. நடனமாடும் இருவரும் ஒருவரோடு ஒருவர் ஒத்திசைந்து நடனமாட வேண்டும். ஒருவரது கால் வைப்பு முறை சற்றுத் தவறினாலும் மற்றவரது நடனத்தையும் அது பாதிக்கும். இது போன்று பெற்றோர்களும் பிள்ளைகளும் ஒருவரோடு ஒருவர் ஒத்திசைந்து நடப்பது இன்றியமையாததாகும். பிள்ளைகள் உற்சாகமாக எதையாவது கூறும்போது அதனை அதே உற்சாகத்தோடு பெற்றோர்களும் கேட்டு பிள்ளைகளது உணர்வுகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமானது. அது போலவே, பிள்ளைகள் வாழ்வில் இடையூறுகளோ தோல்விகளோ வரும்போது அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவதும், அத் தோல்வியிலிருந்து பிள்ளைகள் வெளிவருவதற்கான உதவிகளைப் புரிவதும் அவசியமாகும். இவ்வாறு செய்வதன் மூலமாக பிள்ளைகள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதையும் பெற்றோர்களிடமிருந்து கற்றுக்கொள்வார்கள்" என்று கூறினார்.

சில சமயங்களில் பெற்றோர்கள் இடும் கட்டளைகளும் குடும்ப வரையறைகளும் இள வயது பிள்ளைகளுடனான முரண்பாடுகளுக்குக் காரணமாக அமையும். காலையில் அனைவரும் எழுந்ததும் தத்தமது கட்டில்களை ஒழுங்கு பண்ணுதல் வேண்டும் என்பது தாயாரின் நிபந்தனை. இளைஞர்கள் அதனை ஏற்பதில்லை. இப்படியான சிறிய பிரச்சினைகளுக்கு பெற்றோர்கள் தமது அதிகாரத்தைப் பிள்ளைகள் மீது வன்மையாகப் பிரயோகிப்பது கருத்து வேறுபாடுகளைத் தீவிரப்படுத்தும். அதற்குப் பதிலாகப் பெற்றோர்கள் பிள்ளைகள் மீதான தவறை நிதானமாக கூறுவார்களாயின் அது பிள்ளைகளின் மனதில் பதியும். இது அவர்கள் தமது தவறை தாமே உணர சந்தர்ப்பம் கொடுப்பதற்கும், தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், பெற்றோர்களின் சொல்லுக்கு மதிப்பளிப்பதற்கும் உதவும்.

"நீ உனது நண்பர்களோடு எங்கே சென்றாய் என்று எனக்குத் தெரியாதபோது எனக்கு உனது பாதுகாப்பு பற்றிப் பயம் ஏற்படுகின்றது" என்றோ "குடும்பத்தில் நாங்கள் எல்லோருமாக எமது கலாசாரம், பண்பாடு என்பவற்றைப் பேணுவோமாயின் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன்" என்றோ பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கூறுவார்கள். இவ்வாறு பெற்றோர்கள் கூறுவதினால் பிள்ளைகள் பெற்றோர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வீண் முரண்பாடுகளைத் தவிர்ப்பார்கள். அத்துடன், அவர்கள் கூறுவதைப் பிள்ளைகள் பொறுமையாக செவிமடுப்பதற்கும் இது உதவும்.

சாரதா தனது பதினாறு வயது மகனுடனான முரண்பாடுகளை விளக்கும்போது, "நான் எதைக் கேட்டாலும் அவன் எனக்கு பதில் தருவதில்லை. நான் பேசத் தொடங்கும்போதே கண்களை உருட்டி, முகத்தைச் சுளித்து, கதவை அறைந்து சாத்திவிட்டு வெளியில் செல்கிறான். நான் எதைக் கூறினாலும் அது அவனுக்குப் பிழையான விடயமாகத் தெரிகின்றது. என்னைவிட நண்பர்கள் முக்கியமானவர்களாகத் தெரிகின்றார்கள்" என்று கூறினாள். ஒருவர் மீது மற்றவர் கோபப்படுதல் என்பதும் முரண்படுவதும் எல்லாக் குடும்பங்களிலும் நிகழும் ஒரு விடயம். கோபம் வரும் தருணங்களில் உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பது தவறான ஒரு செயல்பாடல்ல. அது ஒரு வகையில் உளவியல் ரீதியில் உதவியும் செய்யும். ஆனால், இவை ஆரோக்கியமான வரையறைகளுக்குள் நின்று, ஒருவர் மீது மற்றவருக்கான மதிப்பை இழக்காத வகையிலும், அன்பை இழக்காத வகையிலும் செய்யப்படுகின்றனவா என்பதுதான் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.